



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## சிறுபான்மையினர் நலன்

### மானியக் கோரிக்கை எண். 9

**அறிவிப்புகள்**

**2024- 2025**

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# சிறுபான்மையினர் நலன்

### மானியக் கோரிக்கை எண்.9

## அறிவிப்புகள்
## 2024- 2025


**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

## 1) சிறுபான்மையின மகளிருக்கு 2500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குதல்.

சிறுபான்மையின மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் குழுக்கள் அமைத்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation) மூலம் தேவையான பயிற்சி அளித்து, மின்மோட்டாருடன் கூடிய ஒரு தையல் இயந்திரம் ரூ.6400 மதிப்பில் 2500 மகளிர் பயன்பெறும் வகையில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 2) உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தியும் மற்றும் மூக்கு கண்ணாடி உதவித்தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தியும் வழங்குதல்.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தியும் மற்றும் மூக்கு கண்ணாடி உதவித்தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்படும்.



## 3) கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை உயர்த்தியும் மற்றும் உறுப்பினர்களின் குடும்பத்தை சார்ந்த 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகையும் வழங்குதல்.

கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகைகள் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

- ஓய்வூதியத்தொகை ரூ.1,000/–லிருந்து ரூ.1,200/–
- மூக்கு கண்ணாடி உதவித்தொகை ரூ.500/–லிருந்து ரூ.750/–
- இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.30,000/–
- விபத்து மரணத்திற்கான உதவித்தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.1,25,000/–

மேலும், இவ்வாரிய உறுப்பினர்களின் குடும்பத்தை சார்ந்த 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.1000/– கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

4) உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மற்றும் கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை இணைய வழியில் செயல்படுத்திட தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் தனி மென்பொருள் (Software) மற்றும் வலைதளம் (Web Portal), 25 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்குதல்.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மற்றும் கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இணைய வழியில் செயல்படுத்திட தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் தனி மென்பொருள் (Software) மற்றும் வலைதளம் (Web Portal), 25 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.



5) கடலூர் மாவட்டத்தில் செயல்படும் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு 3 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சொந்த கட்டடம் கட்டுதல்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி கடலூர் மாவட்டத்தில் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு 3 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சொந்த கட்டடம் கட்டப்படும்.

6) புதுக்கோட்டை மாவட்டத்தில் நூறு மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு புதிய சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதி 56 இலட்சம் ரூபாய் செலவில் துவங்குதல்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நூறு மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதி 56 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவங்கப்படும்.



7) திருப்பூர், திருவள்ளூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 8 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் திருவள்ளூர் மற்றும் சிவகங்கை ஆகிய 2 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் 10 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவங்குதல்.

முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிரின் நலனை கருத்தில் கொண்டு திருப்பூர், திருவள்ளூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 8 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் திருவள்ளூர் மற்றும் சிவகங்கை ஆகிய 2 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் 10 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவக்குவதுடன் இச்சங்கங்களுக்கு இணைமானியம் இருமடங்காக 1:2 என்ற விகிதாசாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு 20 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.

## 8) மக்கள் அதிகம் வரும் தொன்மையான 6 தர்காக்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த 5 கோடி ரூபாய் வழங்குதல்.

தமிழ்நாட்டில் மக்கள் அதிகம் வரும் தொன்மையான பின்வரும் 6 தர்காக்களில் தேவையின் அடிப்படையில் தங்கும் இடம், சீருந்து நிறுத்தும் இடம், கழிப்பிடம் மற்றும் குளியல் அறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். இதற்காக அரசு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் வழங்கப்படும். மீதம் தேவைப்படும் தொகை வக்ஃப் வாரியத்தின் நிதியிலிருந்து செலவிடப்படும்.

1. ஹஸ்ரத் தமீம் அன்சாரி தர்கா, கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம்,
2. ஹஸ்ரத் ஷேக் தாவூத் கமில் வலியுல்லாஹ் தர்கா, முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம்,
3. ஹஸ்ரத் சையத்அலி பாத்திமா நாச்சியார் தர்கா, ஆத்தங்கரை பள்ளிவாசல், ராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.
4. ஹஸ்ரத் நூர் முகமதுஷா அவுலியா தர்கா, பன்ருட்டி, கடலூர் மாவட்டம்,
5. ஹஸ்ரத் ஹமீது அவுலியா தர்கா, காஞ்சிபுரம் மாவட்டம்,
6. ஹஸ்ரத் உக்காஷா தர்கா, பரங்கிப்பேட்டை, கடலூர் மாவட்டம்.



## 9) வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காக 1 கோடி ரூபாய் வழங்குதல்.

மாநிலம் முழுவதுமுள்ள வக்ஃப் வாரிய நிலங்களை நவீன நில அளவை கருவிகள் மூலம் நில அளவை செய்வதற்காக 30 உரிமம் பெற்ற நில அளவர்களை நியமனம் செய்து DGPS Rover கருவிகள் மூலம் நில அளவைப் பணிகள் மேற்கொள்ள அரசு நிதி 1 கோடி ரூபாய் வழங்கப்படும். மீதம் தேவைப்படும் தொகை வக்ஃப் வாரியத்தின் நிதியிலிருந்து செலவிடப்படும்.

## 10) முதல் முறையாக ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் புனித பயணிகள் ஒவ்வொருவருக்கும் 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குதல்.

முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். இச்செலவினம் ஹஜ் புனிதப் பயணத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் 10 கோடி ரூபாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்